**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. C.C.No. 16/2025**

**Deposition of Witness for Petitioner PW1 (LW1)**

| | | |
|---|---|---|
| **Name** | : | விஜயகுமார் |
| **Father's Name** | : | சந்திரசேகர் |
| **Village** | : | தவிட்டுமேடு |
| **Taluk** | : | கோத்தகிரி |
| **Calling** | : | கூலி வேலை |
| **Age** | : | 29 |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**11.08.2026** **Witness Signature :**

**எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**முதல் விசாரணை 12.10 P.M (சாட்சியை கோத்தகிரி தலைமைக் காவலர் எண் 158 திரு. எம். மனோகரன் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டார்.**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எதியை எனக்குத் தெரியும். ஆஜர் எதிரி என்னை 2 நாளாக வேலைக்கு அழைத்தார். ஆனால் வேலைக்கு அழைத்துச் செல்லவில்லை. கடந்த 1 வருடத்திற்கு முன்னர் ஒரு நாள் இரவு சுமார் 07.00 மணியளவில் நான் வேறு வேலைக்கு சென்றுவிட்டு அரவேனுக்கு சென்றபோது அங்கு ஆஜர் எதிரி இருந்தார். அவரிடம் ஏன் என்னை வேலைக்கு அழைத்து

செல்லவில்லை என்று கேட்டேன். அதற்கு அவர் கெட்ட வார்த்தையால் திட்டி அடித்தார். அதன்பின்பு சிறு கத்தியால் கழுத்து மற்றும் வலது வயிறு ஆகிய இடத்தில் குத்தி காயம் ஏற்படுத்தினார். பின்னர் அந்த கத்தியை காட்டி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்தார். எனக்கு காயம் ஏற்பட்ட உடன் நான் மயக்கம் போட்டு கீழே விழுந்துவிட்டேன். அரவேனுவில் அருகில் இருந்தவர்கள் என்னை கோத்தகிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சையில் சேர்த்தார்கள்.

2. நான் கோத்தகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் வந்து விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரி என்னை கழுத்தில் மற்றும் வயிற்றில் குத்தி காயம் ஏற்படுத்திய கத்தியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். தற்போது என்னிடம் காட்டப்படும் கத்தியால்தான் ஆஜர் எதிரி என்னை குத்தி காயம் ஏற்படுத்தினார். அந்த கத்தி அ.த.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. போலிஸ் விசாரணையிலும், புகாரிலும் சம்பவத்தன்று நான் அளவுக்கு அதிகமாக மது அருந்தியிருந்தேன் என்று கூறியிருந்தேன் என்றால் சரியல்ல. அரவேனு பேக்கரி முன்பு தான் சம்பவம் நடந்தது என்று

சொல்லியிருந்தால் அது தவறு என்று சொன்னால் சரிதான். சோயா கடை முன்பு தான் பிரச்சனை நடந்தது. சோயா கடை முன்பு முள்வேலி உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த சோயா கடை நடத்தி வந்தவர் பெயர் செந்தில்குமார் என்றால் சரிதான். அவர் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். நான் சம்பவத்தன்று அளவுக்கு அதிகமாக மது அருந்தியிருந்ததால் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. அந்த முள்வேலியில் மதுபோதையில் நிலை தடுமாறி விழுந்துதான் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான்தான் எதிரியை முதலில் கீழே தள்ளிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் தாக்கல் செய்துள்ள கத்திக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

2. சம்பவம் நடக்கும்போது இரவு சுமார் 08.00 மணி இருக்குமா என்றால் 07.45 மணி இருக்கும். அந்த நேரத்தில் இருட்டில் யார் பக்கத்தில் இருக்கிறார்கள் என்று தெரியாது என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தில் பயன்படுத்திய கத்தியின் விவரங்கள் போலிஸ் விசாரணையிலும், புகாரிலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் முள்வேலியில் விழுந்து ஏற்பட்ட காயத்திற்காக சம்பவத்தன்று கத்தி பயன்படுத்தியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி கத்தியை வைத்திருந்த விவரத்தை பற்றி போலிஸ் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தில் பயன்படுத்திய கத்தி Wiring செய்ய பயன்படுத்தும் கத்தி ஆகும். நான் சொல்வதுபோல் ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றாலும், நானே முள்வேலியில் விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து பொய் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால்

சரியல்ல. எதிரி என்னை வேலைக்கு அழைத்துச் செல்லவில்லை என்ற கெட்ட எண்ணத்தில்தான் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

Sd/- G. Amirdham, 11.08.2026
Judicial Magistrate,
Kotagiri